கல்குடா கல்வி வலய வளநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை கூ.பொ.த (உ/த) – 2018 ஆனி

தரம்: 13 (2018)	தவணை: 06	கிறிஸ்தவம் I	நேரம்:2.30மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

1. திரு. விவிலியம் எழுத்தாக்கம் பெற ஆரம்பமானது.?
   1. கி. மு 950 2. .கி.மு 800 3. கி. பி. 100 இல்
   4. கி. மு 100ல் 5. கி. மு 950 – கி.பி 100 காலப்பகுதியில்

2. **பின்வரும் கூற்றுக்களைக் கருத்திற் கொள்க.**
   A. – தவறான கொள்கைகளை விலக்குதல்
   B. – உண்மையை மாறாது பாதுகாத்தல்
   C. – கிறிஸ்தவ திருச்சபை வேகமாகப் பரவிச் செல்லுதல்
   D. – கிறிஸ்துவின் வார்த்தைக்கும் செயலுக்கும் சாட்சி பகர்ந்த திருத்தூதர்கள் மரணித்தல்.
   மேலுள்ளவற்றுள் வாய்மொழிப்பாரம்பரியம் எழுத்து வடிவம் பெறவேண்டிய தேவை ஏற்படக் காரணமான கூற்றுக்கள்
   1. ABC 2. ABD 3. ACD 4. BCD 5. ABCD

3. பழமை வாய்ந்த நூலாக திருவவிலியம் அறிமுகம் செய்யப்படுவதற்கான காரணம் அதில் . உள்ளடக்கப்பட்டுள்ள
   1. கீழைத்தேய இலக்கிய அம்சமாகும்
   2. கீழைத்தேயங்களுக்குரிய விடயமாகும்
   3. பழைய மொழிகளின் கருத்துக்களும் சாட்சிகளுமாகும்
   4. வரலாற்றுக் கதைகளும் சாட்சிகளுமாகும்
   5. அரசியல் செய்திகளாகும்

4. விடுதலைப் பயணத்தின் பின் கானா தேசத்தில் ஆட்சி செய்த தலைவர்கள்.?
   1. நீதிபதிகள் 2. குலமுதுவர்கள் 3. ஆளுனர்கள்
   4. தலைமைக்குருக்கள் 5. பரிசேயர்கள்

5. பார்வோனின் முடியின் மீது இருந்தது.?
   1. கழுகின் சின்னம் 2. பல்லியின் சின்னம் 3. பாம்பின் சின்னம்
   4. வெற்றியின் சின்னம் 5. பூவின் சின்னம்

6. இறைவனுடைய வல்லமையை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் வாக்களித்த நாட்டுக்கு இஸ்ரயேல் மக்களோடு செல்லமாட்டீர்கள் என்று கூறப்பட்டது.?
   1. ஆரோனுக்கும் , யோசுவாவிற்கும்
   2. யோசுவாவிற்கும் , மோசேக்கும்
   3. இஸ்ரயேலர்களுக்கும் , மக்கள் தலைவர்களுக்கும்
   4. மோசேக்கும் , ஆரோனுக்கும்
   5. அமலேக்கியருக்கும் , ஆரோனின் வழிமரபினரிற்கும்

7. பின்வரும் நூல்களுள் இணைத்திருமுறை நூல்களுள் அடங்காதவை.?
   1. தோபித்து 2. பூபித்து 3. பாறுக் 4. யோபு 5. சீராக்கின் ஞானம்

8. முதலாவது படைப்புக் கதையின் படி இரண்டாம் நாளுக்கு சமாந்திரமாக எத்தனையாம் நாள் ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றது.?
   1. முதலாம் நாள் 2. மூன்றாம் நாள் 3. நான்காம் நாள்
   4. ஐந்தாம் நாள் 5. ஆறாம் நாள்

9. இரண்டாவது படைப்புக் கதையின் படி மனிதன் இறைவனோடு படைப்புச் செயற்பாட்டில் தொடர்புபடுவது.?
   1. உயிருள்ள அனைத்திற்கும் பெயரிட்டதன் மூலம்
   2. படைப்பை ஆளுவதன் மூலம்
   3. படைப்பை விருத்தி செய்வதன் மூலம்
   4. பாவத்திலிருந்து விலகியிருப்பதன் மூலம்
   5. பலி ஒப்புக் கொடுப்பதன் மூலம்

10. பாவம் பற்றிய பின்வரும் கூற்றுக்களை கருத்திற் கொள்க
   A. - இறைவனுக்கு சொந்தமானதை பறித்தெடுத்தலாகும்
   B. – பௌதீகத்திற்கு அடிமையாதலாகும்
   C. - இறை திட்டத்திற்கு விகாரப்படுத்தலாகும்
   D. – சீனாய் உடன்படிக்கையை மீறுதல்
   இவற்றுள் திருவிவிலிய வல்லுனர்கள் எடுத்துக் காட்டுவதன் படி பாவம் பற்றிய சரியான கூற்றுக்களாவன.?
   1. AB 2. AC 3. AD 4. BC 5. BD

11. பெயிஸ்தியருக்கு எதிராகப் போரிடவும் பின்னர் அகீரியர் பபிலோனியர்களுக்கு எதிராகப் போரிடவும் இராணுவத்தளமாகப் இஸ்ரயேலருக்கும் பயன்பட்டது.?
   1. சாரோன் சமவெளி 2. செப்போலா சமவெளி 3. பேலிஸ்திய சமவெளி
   4. எஸ்திரயோன் புல்வெளி 5. சமாரியப் பகுதி

12. ♦ குல முதுவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதி
   ♦ எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்டல்
   ♦ பாலை வனத்தில் இறை பராமரிப்பு
   ♦ சீனாய் உடன்படிக்கை
   மேற்கூறப்பட்ட கருத்துக்களைக் கொண்டமைந்த திருவிவிலியத்தின் பகுதி.?
   1. திருவெளிப்பாடு 2. இறைவாக்கினார்கள் 3. வுரலாற்று நூல்கள்
   4. ஐந்நூல் 5. இலக்கிய நூல்கள்

13. யோசுவாவின் தலமைத்துவத் தோடு தொடர்புடையது.?
   1. செங்கடலைக் கடத்தல் 2. வெண்கலப் பாம்பை உயர்த்துதல்
   3. எரிகோவைக் கைப்பற்றுதல் 4. மோசே மலைக்குச் செல்ல மக்களைவழிநடத்தல்
   5. அம லேக்ரியரோடு போராடி வெற்றி பெறல்

14. சமய முக்கியத்துவதை எருசலேமிற்கு பெற்றுக் கொடுத்த அரசர்.?
   1. சாலமோன் 2. சவுல் 3. தாவீது 4. ஆகாசு 5. ஏகு

15. பபிலோனியாவில் இறையன்பையும் பராமரிப்பையும் இஸ்ரயேலர் அனுபவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கிய இறைவாக்கினர்கள்.?
   1. எரேமியா எசேக்கியேல் 2. எசேக்கியேல் , எசாயா 3. எரேமியா எசாயா
   4. எசாயா , ஆமோஸ் 5. ஆமோஸ் , ஒசேயா

16. கி.மு 444 ஆண்டளவில் நெகேமியாவின் தலமையின் கீழ் எருசலேம் மதில் கட்டப்பட்ட காலம்.?
    1. சவுல் அரசனின் காலத்தில் 2. தாவீதின் காலத்தில் 3. சாமோனின் காலத்தில்
    4. தாரியுஸ் அரசன் காலத்தில் 5. எஸ்ரா காலத்தில்

17. எலோகிம் மரபுடன் தொடர்புடைய கூற்றுக்களில் பொருத்தமற்றது .?
    1. இறைவனை மனித உருவில் முன் வைத்தல்.
    2. மிக உன்னத நிலையில் இறைவனை எடுத்துக் காட்டல்.
    3. இறைதூதர் வழியாகவும் கனவுகள் , வழியாகவும் தொடர்பு
    4. மனம் வருந்துதலும் பாவங்களுக்கு மன்னிப்பு பெறுதலின் முக்கியத்துவமும் வெளிப்படுத்துகின்றது.
    5. மனித அனுபவங்களிலிருந்து இறைவன் விலகி இருத்தல்.

18. ரோமை அரசிறகு வரி செலுத்துவதற்கு எதிரானவர்களும் , மெசியாவின் வருகை இந்தப் பேரரசுகளை எல்லாம் விரட்டுவதற்கு செயற்படும் எனவும் நம்பியிருந்தவர்கள்.?
    1. பரிசேயர் 2. சதுசேயர் 3. மறைநூலறிஞர்
    4. எஸ்ஸீனியர் 5. செலோத்தேயர்

19. மனிதனால் நிறைவேற்ற முடியாத காரியங்கள் இறைவனால் நிறைவேற்றப்படுமென விசுவாசித்தவர்.?
    1. யோபு 2. யாக்கோபு 3. பவுல் 4. ஆபிரகாம் 5. எலிசபெத்

20. தொடக்க நூல் மூன்றாம் அதிகாரத்தில் குறிப்பிடப்படுவது.?
    1. இறைவனுக்கும் மனிதனுக்குமிடையிலான உறவு முறிவடைதல்
    2. இறைவன் மனிதனைப் படைத்தல்
    3. இறைவன் ஏனைய படைப்புக்களை படைத்தல்
    4. இறைவன் மனிதனைப் படைத்து ஏதேன் தோட்டத்தில் வாழ வைத்தல்.
    5. இறைவன் ஆதிப் பெற்றோரின் பிள்ளைகளைப் படைத்தல்

21. மோசேக்கு இத்திரோ யாரைத் திருமணம் செய்து வைத்தார்.?
    1. லேயாவை 2. செத்தூராவை 3. சிப்போராவை 4. தெபோராவை
    5. செருத்தியாவை

22. இயேசு இறையரசைப் போதிக்கும் போது பயன்படுத்திய சக்திவாய்ந்த செயல் முறையாக அமைவது.?
    1. உவமைகள் 2. கற்பித்தல் 3. தவச் செயலகள்
    4. இரக்கச் செயல்கள் 5. புதுமைகள்

23. இறையரசை அடைவதற்கான நிபந்தனை.?
    1. அன்பு 2. மன்னித்தல் 3. தானதருமம் செய்தல்
    4. மனமாற்றம் 5. போதித்தல்

24. கிரேக்க மொழில் “ பசிலெய்யா ” என்ற சொல்லின் மூலம் கற்பிக்கப்படுவது.?
    1. நற் செய்தி நூல் என்பதாகும் 2.“ இறையரசு ”என்பதாகும் 3. மரபுகள் என்பதாகும்
    4. “ சீடர்கள் ” என்பதாகும் 5. திருச்சபை என்பதாகும்

25. தூயமாவிற்கு 15 : 14 – 15 ன் படி தலமைக்குருக்கள் இயேசுவைப் பிலாத்திடம் கொண்டு செல்லக் காரணம்.?
    1. இயேசு சீசரின் ஆட்சிக்கு ஓர் அச்சுறுத்தலாக இருந்தமை
    2. ரோமைக் குடிமக்களைச் சிலுவையில் அறைய சட்டத்தில் தடைவிதிக்கப்பட்டிருந்தமை.
    3. மறைச்சட்டத்திற்கு ஏற்ப எவரையும் சிலுவையில் அறைய சட்டத்தில் தடை விதிக்கப்பட்டிருந்தமை

4. இயேசு ஒரு கலகக்காரன் என்று நினைத்தமை
5. யூத மறையைப் பரப்ப கிறிஸ்துவின் போதனைகள் தடையாக இருந்தமையாகும்.

26. இயேசுவின் புதுமையைக் குறிக்க ' செமயோன் ' என்னும் சொல்லைப் பயன்படுத்திய நற்செய்தியாளர்
1. மாற்கு 2. லூக்கா 3. யோவான் 4. மத்தேயு 5. சமநோக்கு நற்செய்தி

27. யூதர்களின் நாட்காட்டியின் படி வாரத்தின் முதல் நாள் என்பது.?
1. ஞாயிற்றுக் கிழமை 2. திங்கட்கிழமை 3. வெள்ளிக்கழமை 4. சனிக்கிழமை
5. வியாழக்கிழமை

28. ''என்னுடையதெல்லாம் உம்முடையதே உம்முடையதெல்லாம் என்னுடையதே'' இவ்வாறு எழுதப்பட்டுள்ளது?
1. மலைப் பொழிவில் 2. இயேசுவின் வேண்டலில் 3. சமவெளிப் பொழிவில்
4. செபக்கூடத்தில் செய்த பொழிவில்
5. கெஸ்தமனி தோட்டத்தில் செய்த விண்ணப்பத்தில்

29. பிலாத்து '' நான் எழுதியது '' எனக் கூறக் காரணம்.?
1. தலமைக் குருக்கள் இயேசுவின் அறிக்கையை எழுத வேண்டாம் எனக் கூறியமை
2. நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன் என்று எழுதும் படி கேட்டுக் கொண்டதாகும்
3. யூதர்களின் அரசன் நான் என்று அவனே சொல்லிக் கொண்டதாக எழுதும் என்று கேட்டுக் கொண்டதாகும்
4. தீர்ப்பை மாற்றி தமது செனட் சபைக்கு தரும்படி கேட்டுக் கொண்டதாகும்
5. தலமைக் குருவின் அறிக்கையுடன் ஒத்து வராத காரணத்தால் இவ்வறிக்கையை அகற்றும்படி கூறியதாகும்.

30. நல்லதொரு வாழ்க்கை முறைக்கு நம்மை ஈடுபடுத்தும் உவமையாக அமைவது.?
1. வலை 2. புதையல் 3. முத்து 4. திருமணவிருந்து
5. தானாக முளைக்கும் விதை

31. புனித பவுல் கணவனுக்கும் மனைவிற்குமிடையேயுள்ள உறவு கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையேயுள்ள
உறவிற்கு ஒப்பிட்டுக் கூறுவது.?
1. கலாத்தியரில் 2. .i கொரிந்தியரில் 3. .ii கொரிந்தியரில்
4. ரோமயரில் 5. எபேசியரில்

32. இறைவனுடன் தொடர்பு கொள்வதால் பெறப்படும் அவர் பற்றிய ஆழ்ந்த உண்மைகளை அறியும் ஆற்றலை விளக்கும் தூய ஆவியின் கொடைகளில் ஒனறு.?
1. அறிவு 2. ஞானம் 3. பேயோட்டு ஆற்றல் 4. விசுவாசம்
5. புதுமைகள் செய்யும் ஆற்றல்

33. இயேசு கிறிஸ்து தமது பிதாவுக்கு சரி சமமானவர் என்றும் பிதாவோடு ஒரே பொருளானவர் என்றும் அறிக்கை செய்த சங்கம்.?
1. கொன்த்தாந்தி நோபில் 2. எபேசு சங்கம் 3. எருசலேம் சங்கம்
4. நிசேயா சங்கம் 5. கல்சிடோன் சங்கம்.

34. பெரிய சார்ள்ஸ் அரசன் கல்வி நிலையை முன்னேற்றுவதற்காக தனது செயலாளருடைய தலமைத்துவத்தின் கீழ் ஒரு அறிவாளிகள் குழுமதத்தை உருவாக்கினார் அச்செயலாளர்?
1. நிக்கலஸ் 2. அல்குயின் 3. சிறில் 4. அந்தனாசியரஸ் 5. ஒடோ

35. பத்தாம் நூற்றாண்டில் திருச்சபையின் ஆன்மீகம் நலிவடைந்த போது கத்தோலிக்க திருச்சபை

முதலாவது ஓட்டோ என்னும் ஜேர்மனிய இனத்தவரால் ஆட்சி செய்யப்படக் காரணமான திருத்தந்தை.?
1. திருத்ததை 1ம் பத்திநாதர் 2. திருத்தந்தை 12ம் பத்திநாதர்
3. திருத்ததை 12ம் ஜோன் 4. திருத்ததை 12ம் பத்திநாதர்
5. திருத்ததை 2ம் ஜோண்ளபவுல்

36. பாவங்களுக்குரிய தண்டனையிலிருந்து முழுமையாக அல்லது அரைவாசி விடுதலை பெறுவதற்கு பணத்தைப் பயன்படுத்துவதை தூய வியாபாரம் என்று அழைத்தவர்.?
1. 7ம் ஹென்றி 2. சுவிங்கிலி 3. 8ம் ஹென்றி 4. கல்வின் 5.மாட்டின் லூதர்

37. சீர்திருத்த சபைகளின் இரண்டாவது பரம்பரையைச் சேர்ந்த வரும் சீர்திருத்த பிரஸ்பிடேரியன் சபைகளின் ஸ்தாபகரும்.
1. 7ம் ஹென்றி 2. சுவிங்கிலி 3. 8ம் ஹென்றி
4. கல்வின் 5. மாட்டின் லூதர்

38. கி.பி 1098 ல் மொலேஸ்மாவின் துறவியான றொபோட்டினால் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபையும் பெனடிற் துறவற சபைக்குள்ளும் திருச்சபைக்குள்ளும் ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்திய சபையும்.?
1. சிஸ்ரேசியன் 2. குளுனி 3. லூதரன் 4. வல்தேரியன் 5. ஆசிர்வாதப்பர்

39. பூமியில் வாழ்கின்ற மனிதனின் பரிணாம வரலாற்றை பற்றிய முழுமையான தத்துவத்தை முன் வைத்துள்ள சிந்தனையாளரான அருட்பணி ரெயாட் டீ சார்டேன்.
1. அகுஸ்தினார் சபையைச் சேர்ந்தவர் 2. அக்குவைனர் சபையைச் சேர்ந்தவர்
3. டோமினிக்கன் சபையைச் சேர்ந்தவர் 4. இயேசு சபையைச் சேர்ந்தவர்
5. ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்தவர்

40. போத்துக்கேயர் காலத்தில் மகா ஓயாவின் வடக்குப் பகுதிகளின் பணிபுரிந்த துறவற சபையினர்.
1. இயேசு சபையினர் 2. அகுதினார் சபையினர் 3. டொமினிக்கன் சபையினர்
4. பிரான்சிஸ்கன் சபையினர் 5. ஓரிற்றோரியன் சபையினர்.

41. அமபுறோஸ் , ஜெரோம் , அகஸ்டின் , கிளரி ஆகியோரைத் திருச்சபையின் பெரிய தந்தையர்கள் என உத்தியோக பூர்வமாக முதன் முதலாகப் பெயரிட்டவர்.?
1. திருத்தந்தை 12 ம் பத்திநாதர் 2. திருத்தந்தை 6ம் பவுல்
3. திருத்தந்தை 8வது பொனிபாஸ் 4. திருத்தந்தை 13வது சிங்கராயர்
5. திருத்தந்தை 10ம் பத்திநாதர்

42. ஒல்லாந்தர் காலத்தில் மாணவர்கள் பாடசாலையில் கல்வியைக் கற்க வேண்டிய காலமாகக் கணிக்கப்பட்டது?
1. 8 – 15 2. 5 – 15 3. 6 – 16 4. 8 – 19 5. 4 – 16

43. 1658 ல் இலங்கைக்கு இராணுவத்திற்கு பொறுப்பாகச் செயலாற்றுவதற்காக இலங்கைக்கு வந்தர்.?
1. பெர்லின் எசவ் 2. தொன் யுவான் 3. ரொறேனோ
4. பேதுரு பெற்றாவோ 5. பிலிப் பல்தேயுஸ்

44. திருச்சபையின் வரலாற்றில் பாடற்திருப்பலி துக்கபாடல் திருப்பலி உருவாக்கப்பட்டது.?
1. 16. நூ/டு 2. 11ம் நூ/டு 3. 4ம் நூ/டு 4. 19ம் நூ/டு 5. 20ம் நூ/டு

45. பல்வேறு இடங்களிலிருந்து யாத்திகர்களை வரவழைத்து கி.பி 1870 யூலை மாத்தில் மடுத்திருத்தலத்தில் விழாவினை ஆரம்பித்தவர்.?
1. யாக்கோமே கொன்சாவேஸ் அடிகளார் 2. புனித யோசவ்வாஸ் அடிகளார்
3. பெற்றக்கீனி அடிகள் 4. தொனயுவான் அடிகள்
5. அருட்தந்தை கிறிஸ்தோபர் பொஞ்சின் அடிகள்.

46. ஆரம்ப காலங்களில் பொதுச்சங்களை நடத்தும் போது கூடுதலான அதிகாரம் இருந்தது.?
1. திருச்சபையின் தலைப்பீடத்திற்கு 2. வத்திகான் பிரதிநிதிக்கு
3. திருச்சபையின் தலைவருக்கு 4. மறைமாவட்ட அதிகாரிக்கு 5. உரோமபேரரசிற்கு

47. கிறிஸ்து அரசர் பெரு விழா கத்தோலிக்க திருச்சபையின் கொண்டாடப்பட வேண்டுமென பிரகடனம் செய்த திருத்தந்தை
    1. திருத்தந்தை 23ம் அருளயர் 2. திருத்தந்தை 13ம் சிங்கராயர்
    3. திருத்தந்தை 2ம் அருள்சின்னப்பர்
    4. திருத்தந்தை 10ம் பத்திநாதர் 5. திருத்தந்தை 6ம் சின்னப்பர்

48. மத்திய யுகத்தில் கிறிஸ்தவ சிற்பக்கலையைப் பயன்படுத்தியிருப்பது.?
    1. கட்டிடக்கலையின் அபிவிருத்தியை முன்னிட்டு
    2. கலாச்சார மதிப்பீடுகளின் ஊடாக இறைவனை வழிபடுவதற்க்காக
    3. ஆலயங்கள் கட்டங்களை அலங்கரிக்கும் முறையாக
    4. சிற்பக் கலையை அனுபவரீதியாக அறிவதற்காக
    5. ஆலயக் கட்டடங்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக

49. இரண்டாம் நூற்றாண்டில் உரோமையில் குருத்தத்துவத்தை வழங்குதல் பற்றி புனித ஹிப்பொலிற்றஸ் ஆடிகளார் குறிப்படும் நூல்.?
    1. டிடாக்கே 2. ஹேர்மஸ் ஆயன் 3. திருத்தூதர்களின் பண்பாடு
    4. சாந்தப்பரின் கடிதங்கள் 5. சும்மா தியோலோஜியே

50. இரண்டாம் பணிபுரியும் சமூக நலன்புரி இரக்கப்பணி நிறுவனங்களில் பொருத்தமற்றது.?
    1. செடேக் 2. புனித வின்சட் தேபவுல் 3. கிறிஸ்தவஇளைஞர் சங்கம்
    4. கிறிஸ்தவ மகளிர் சங்கம் 5. கிறிஸ்தவ நலிவுற்றோர் சங்கம்

.

(50 × 2 = 100 புள்ளிகள்)